2007 ஏப்ரல் 10]

(இ) அரியலூர் தொகுதி, கிராமங்களில் திருவிழாக்கள் நடத்த அனுமதிப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி. (குறுக்கீடு)*

திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தொகுதியில். மாசி மாதத்திலிருந்துதான் எல்லாக் கிராமங்களிலும் திருவிழாக்கள் தொடங்கப்பெறும். தை மாதம் அறுவடை முடிந்து, அதைக் கொண்டு வந்து விவசாயிகள் விற்றுவிட்டு, திருவிழாவை மாசி மாதத்திற்குப் பிறகுதான் ஆரம்பிப்பார்கள். அந்தக் கோயில் திருவிழாக்களிலே, இரவு நேரங்களிலே நாட்டுப்புற ஆடல், பாடல் நிகழ்ச்சி, கலை நிகழ்ச்சி; காலை நேரத்திலே, ஜல்லிக்கட்டு அல்லது மஞ்சுவிரட்டு என்று சொல்வார்களே, அவையெல்லாம் வழக்கமாக ஒவ்வொரு கிராமத்திலும் நடக்கும்.

தற்சமயம் என்ன பண்ணுகிறார்கள் என்றால், காவல் துறை அதிகாரிகள், நாட்டுப்புற ஆடல், பாடல் நிகழ்ச்சிக்கும் இப்போது அனுமதி இல்லை என்கிறார்கள். ஜல்லிக்கட்டுக்கும் அனுமதி இல்லை என்கிறார்கள். ஜனவரி மாதம், பிப்ரவரி மாதம் ஜல்லிக்கட்டை நடத்திக்கொள்ளலாம் என்று உயர் நீதிமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்தத் திருவிழாவே, மாசி மாதத்திற்குப் பிறகு ஜூன் வரை நடக்கும். மூன்று, நான்கு மாதங்கள், ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நாள் வைப்பார்கள். அன்றைக்குத்தான் அந்தக் கிராமங்கள் ஒன்று கூடும். அந்தக் கிராமத்திலே இருக்கிற வாய்க்கால் சண்டை, வரப்புச் சண்டைபற்றியெல்லாம் அன்றைக்குத்தான் பேசித் தீர்த்து, ஒட்டுமொத்தக் கிராமமும் ஒன்று சேர்ந்து திருவிழாவை நடத்துவார்கள். அந்த ஒட்டுமொத்தக் கிராம மக்களும், அது மாதிரி நடத்தினால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறார்கள். இதற்கு ஒரு சில காவல் துறை அதிகாரிகள் தடை விதித்து, அந்தக் கிராம மக்களிடத்தில் பெரிய கொந்தளிப்பை உண்டுபண்ணுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தத் திருவிழாக்களை அந்தக் கிராம மக்கள் சந்தோஷமாக நடத்துவதற்கு அனுமதி அளிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் திருமண

விழாக்களிலே ஒரு செய்தியைச் சொல்வார். மணமகனுக்கு, மணமகளுக்கு, இருவருக்கும் அறிவுரை கூறுவார். கூறும்போது சொல்வார்; அந்தக் காலத்தில்—இலக்கியக் காலத்தில் புறநானூறு, அகநானூறு, இவையெல்லாம் போற்றப்பட்ட அந்தக் காலத்தில் — ஒரு மணமகள், மணமகன் எப்படி இருக்க வேண்டும் என்று நிர்ணயிப்பாள் என்றால், முரட்டுக் காளையை அடக்கி, அதன் கொம்பை உடைத்து, அதைப்போலப் புலியை அடக்கி, அதன் பல்லைப் பிடுங்கி தாலி கொண்டு வந்தால், அதைத்தான் கட்டிக்கொள்வேன் என்று மணமகள் சொல்வாள். அப்படிப்பட்ட வீரமிக்க காலம் அது. ஆனால், இந்தக் காலத்தில் நான் புலியை அடக்கினேன், நான் மாட்டை அடக்கினேன் என்று வந்தால், "ஏ அப்பா; புலியே அந்தப் பாடுபட்டால், நான் என்ன பாடுபடுவேன்" என்று *(மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)* மணமகள் அஞ்சுகின்ற காலம் இது என்று அண்ணா வேடிக்கையாகச் சொல்வார். ஆனால், அப்படி நடக்க வேண்டும், சமுதாயம் இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. வீரமிக்க சமுதாயமாகத்தான் விளங்க வேண்டும். அப்படி விளங்குவதற்கேற்ற வகையில் இந்த வீர விளையாட்டுக்களைப் பாதுகாப்பாக நடத்துவது நல்லது. ஏனென்றால், பல இடங்களில் நல்ல விழாக்கள் நடைபெறும் நேரத்தில், 10 பேர் இறந்தார்கள்; 20 பேர் இறந்தார்கள்; மாடு முட்டி இறந்தார்கள் என்றெல்லாம் செய்திகள் வருவது உள்ளபடியே சோகமான விஷயங்கள் ஆகும். இன்றைக்குக்கூட பத்திரிகையிலே பார்த்தால், திருவிழாவில் யானை முட்டி, யானை தந்தத்தால் ஒருவருடைய குடலைக் கிழித்து, அதுவே துதிக்கையிலே தூக்கிக்கொண்டு நாலு வீதி சென்றது என்ற செய்திகளைப் பார்ப்பதற்கே கஷ்டமாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஆபத்தான சூழ்நிலைகள் வராமல், வீரத்தை நிலைநாட்டுகின்ற இடத்தில், வீரத்தோடு விவேகமும் சேர்ந்து செயல்பட வேண்டும் என்பதை மாத்திரம் எடுத்துக் கூறி, வீரத்தைத் தடுக்க மாட்டோம், விவேகம் துணைக்கு வர வேண்டும்; அவ்வளவுதான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் . . . *(குறுக்கீடு)*

2007 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன? திரு. து. அமரமூர்த்தி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)* One minute. *(குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.*

திரு. து. அமரமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடல், பாடல் நிகழ்ச்சிக்கு* police *தடை விதிக்கிறார்கள், அதிலே ஒன்றும் பிரச்சினை வரப் போவதில்லை. ஜல்லிக்கட்டு என்பதை எல்லாக் கிராமத்திலும் நடத்துகிறார்கள். எல்லாக் கிராம மக்களும்,* police permission *கொடுக்கமாட்டேன் என்கிறார்கள்; சொல்லுங்கள், சொல்லுங்கள் என்று எங்களைத் தொல்லைப்படுத்துகிறார்கள். நடத்துவது என்றால் நடத்து என்று சொல்ல வேண்டும். இல்லாவிட்டால், அது கிராமத்திலே இருக்கிறது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வீரத்தோடு, விவேகத்தோடு நடந்துகொண்டீர்கள் என்றால் நல்லது என்று சொல்லிவிட்டார்கள் அல்லவா? உட்காருங்கள்.*

(ஈ) சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் வீடு தாக்கப்பட்டது தொடர்பாக

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.*

திரு. மு. கண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 56-ன்கீழ் என்னுடைய பெயரால் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கின்றேன். கடந்த 6-4-2007 அன்று நள்ளிரவில் ஒரத்தநாடு கிராமத்தில் உள்ள, தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்களுடைய வீட்டை 40-க்கும் மேற்பட்டவர்கள் தாக்கி, சேதப்படுத்தி இருக்கின்றார்கள். அங்கே தூங்கிக்கொண்டிருந்த . . . (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்களுக்கு, அதைக் கவன ஈர்ப்பாகக் கொடுத்திருக்கிறீர்கள். நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். உட்காருங்கள்.